**O.S.No.199/2022** தேதி – 08.06.2026

**வா.சா.1.– V.R.N.சிதம்பரம்**

**3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய பத்திரங்களில் கிரையம் செய்யப்பட்ட சொத்து நஞ்சை நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு அசல் கிரைய ஆவணங்களை நான் தாக்கல் செய்ய இயலும். வா.சா.ஆ.1 ல் கிரையம் கொடுத்த நபர்களும், வா.சா.ஆ.2 ல் கிரையம் கொடுத்த நபர்களும் உறவினர் என்ற விபரம் எனக்கு தெரியும். எவ்வாறு சொந்தம் என்பது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ல் சொத்து கிரையம் கொடுத்த நபர்களுக்கு எப்படி பாத்தியம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களில் கிரையம் கொடுத்த நபர்களுக்கு இந்த ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்பதை காட்டுவதற்கு பத்திரமோ, பட்டாவோ தாக்கல் செய்யவில்லை. 1993 ல் எனது தாத்தா எழுதி வைத்த உயிலில் இந்த வழக்கு சொத்து ஒரு விவசாய நிலமாகத்தான் காட்டியுள்ளார் என்றால் சரிதான். 1984 –1990 ஆகிய காலக்கட்டத்தில் எனது தாத்தா இந்த வழக்கு சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளார். மேற்படி கட்டிடம் எந்த கட்டிடம் என்றால் தொழிற்சாலை கட்டிடம் ஆகும். மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சியில் கட்டிட வரைபட அங்கீகாரம் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு தொழில்துறையிலும் கட்டிட அங்கீகாரம் வாங்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற பிரச்சனை எப்போது ஏற்பட்டது என்றால் 2020 ல் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 பட்டா இதற்கு முன்னால் யார் பெயரில் இருந்தது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும். வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.13 வரை உள்ள ஆவணங்களை இந்த வழக்கு சொத்தின் சில பகுதிகள் பிளாட்டுக்களாக காட்டப்பட்டுள்ளது. பிளாட்டுகளாக பிரிப்பதற்கு

மனைப்பிரிவு அங்கீகாரம் வாங்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் பார்த்துதான் சொல்ல முடியும். தாவா சொத்திற்கு ரி–சர்வே, ரி–செட்டில்மெண்ட் நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். ரி–சர்வே, ரி–செட்டில்மெண்ட் ஆவணத்தில் யார் உரிமையாளராக உள்ளார் என்றால் பெயர் தெரியவில்லை. 1900 முதல் வழக்கு சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன். இந்த வழக்கில் நான் எடுத்த வில்லங்க சான்றிதழோ, ரி–சர்வே, ரி–செட்டில்மெண்ட் ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்திற்கு பட்டா கேட்டு 3ம் பிரதிவாதி எந்த ஆண்டு மனு கொடுத்தார் என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கு பட்டா கொடுப்பது சம்பந்தமாக டி.ஆர்.ஓ அலுவலகத்தில் விசாரணை நடந்ததா என்பது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், எனது தகப்பனாருக்கும், கிரையம் வாங்கிய ரவி என்பவருக்கும் காவல் நிலையத்தில் விசாரணை நடந்தது. அந்த விசாரணைக்கு நானும், எனது தகப்பனாருடன் சென்றிருந்தேன். சாட்சி தற்போது எனது அப்பா இறந்த பிறகுதான் காவல் துறையில் விசாரணை நடந்தது என்கிறார். அந்த விசாரணைக்கு கோவில் செயல் அலுவலரை அழைக்கவில்லை. இந்த வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டதில்லை என்றும், கோவிலுக்கு பாத்தியப்பட்ட ஒரு குறிப்பிட்ட அறக்கட்டளைக்கு சொந்தம் என்றும் சொல்கிறார்கள் என்றால் அது தவறு. இந்த வழக்கு சொத்து 3ம் பிரதிவாதி கோவிலில் ஆடி 7ம் திருநாள் கட்டளை நடத்துவதற்காக வழங்கப்பட்ட இனாம் நிலம் என்றால் இல்லை. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2ல் ஆவணங்களில் கிரையம் கொடுத்த நபர்களும், எனது தாத்தாவும், வழக்கு சொத்தை தனி நபர்களுக்கு பாத்தியப்பட்டதுபோல் பத்திரம், பட்டாவும் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் இல்லை. வழக்கு சொத்து 3ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இனாம் நிலம் என்பதால் அதை மீட்க 3ம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிரச்சனை

அறநிலையத் துறை ஆணையரால் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்றாலும், அறநிலைய சட்டம் பிரிவு 108 ன் கீழ் செல்லாது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.